1972 சனவரி 29]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, தக்காளிச் சாறு அதிகமாகத் தங்கியிருக்கிறது என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அதன் மதிப்பீடு என்ன? அவைகள் விற்பனை செய்வதில் காலதாமதமானல் நஷ்டம் ஏற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : நான் தேங்கியிருக்கிறது என்று சொல்லவில்லை. தக்காளிச் சாரை வெளிநாட்டினர் விரும்பி வாங்குவதற்குத் தயாராக இல்லை என்றுதான் சொன்னேன்.

வங்கிகளின் குழுக்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடங்கள்.

* 152 வின.—திரு. ந. சோமசுந்தரம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுத் துறையில் வங்கிகளுக்கு நிர்வாகிகள் தேர்ந்தெடுப்பதில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு (Reserved) தனி இடம் ஒதுக்குவதற்கு திட்டம் ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : மாநில நிலவள வங்கியின் இயக்குநர் குழுவிலும், 16 மத்திய வங்கியின் இயக்குநர் குழுவிலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடங்கள் ஒதுக்கீடு செய்வதற்கான விதிகள் இப்போது அமலில் இருக்கின்றன.

Transport of stags from Guindy

* 153 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether a number of stags have been transported from the Children's Park, Guindy, Madras to Javadi Hills near Vellore ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) ஆறு ஆண் புள்ளி மான்களும், மூன்று பெண் புள்ளி மான்களும், சென்னை கிண்டியிலுள்ள மான்கள் பூங்காவிலிருந்து வேலூர் வனக் கோட்டத்திலுள்ள சந்தவாசல் சரகத்தைச் சேர்ந்த அமர்தி ஒதுக்கக் காடுகளில் விடுவதற்காக, சென்ற ஆகஸ்டு மாதம் அனுப்பப்பட்டன.

Hunting in forests of Tamil Nadu

* 154 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether hunting is allowed in the forests of this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) ஒவ்வொரு வனக்கோட்டத்திலும் ஆண்டு ஒன்றுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமங்களின் எண்ணிக்கைக்கு உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மாவட்ட வன அலுவலர்கள், உரிய கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு, உரிமங்களை வழங்குகிறார்கள்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, திருட்டுத்தனமாக வேட்டையாடுவதால் நமது நாட்டிலுள்ள புலியினம் அடியோடு அறவே அற்றுப் போய்விட்டது என்பது உண்மையா? அதைத் தடுக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அப்படிச் சொல்வது தவறு. வேட்டையாடுவதற்கு உரிமங்கள் வழங்கப்பட வேண்டும். உரிமங்கள் பெறாமல் யாராவது வேட்டையாடினால் அவர்கள் தண்டிக்கப் படுவார்கள்.

Pay of employees of Electricity Department

* 155 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister **for** Electricity be pleased to state—

(*a*) the system and calculations that are adopted for fixing pay scales of the staff of the Mayavaram-Mannargudi-Tiruvarur Electrical Undertakings when it was acquired by the State Electricity Board;

(*b*) whether the arrears have been paid to the staff ; and

(*c*) whether any petition has been received for the payment of arrears and for reconsideration of scales of pay that have been fixed?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) தமிழ்நாடு மின்வாரியத்தின்கீழ் அனுமதிக்கப்படத்தக்க மொத்த ஊதியத்தில் இயன்ற வரையில் இழப்பு ஏதும் ஏற்படாதவண்ணம் பணியாளரது சம்பளம் நிச்சயிக்கப்படுகிறது.

(இ) வாரியத்தின் திருத்தப்பட்ட சம்பள விகிதங்கள் வேண்டாம் என அறிவித்த சில பணியாளர்களைத்தவிர, மற்ற பணியாளர்களுக்கு நிலுவைச் சம்பளங்கள் வழங்கப்பட்டுவிட்டன.

(உ) ஆம்.

Dr. H. V. HANDE : May I know whether the main grievance, i.e., the anomaly pointed out in the absorption orders passed by Government, whether that has been properly rectified? At the time of merger, they have passed an order. That anomaly was exposed and pointed out by the Union concerned. With regard to fixation of pay, the Board has to take the total emoluments, pay and D.A. for the employees' service under the licensee. Has this been brought to the attention of Government? Have the Government rectified it? This has been pending for a long time?